(3) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, நகரத் தொல்லைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1975.)

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, நகரத் தொல்லைகள் (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்'

என்று முன்மொழிகிறேன்.

பொது இடத்தில் கூட்டம் அல்லது ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்பவர்கள் மின்சார விளக்குகளுக்கு ஏற்பாடு செய்வதுடன் பெட்ரோமாக்ஸ் விளக்குகள் மூலம் போதுமான ஒளி வசதிக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று 1888 ஆம் ஆண்டு சென்னை மாநகர காவல் துறைச் சட்டமும், தமிழ் நாடு 1889 ஆம் ஆண்டு நகரத் தொல்லைகள் சட்டமும் வரையறுக்கவில்லை. கூட்டம் அல்லது ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்பவர்கள் பொது மக்களின் பாதுகாப்பு குறித்தும், அசம்பாவிதம் ஏதும் நடப்பதைத் தவிர்க்கவும் மின்சார விளக்குகளுடன் போதிய அளவு பெட்ரோமாக்ஸ் விளக்குகளுக்கும் ஏற்பாடு செய்ய வேண்டியது அவர்களது பொறுப்பாகும் என்று மேற்படி சட்டங்களில் திட்டவட்டமான விதித்துறை செய்வது அவசியமாகும். மேற்சொன்னவற்றிற்கு வகை செய்ய புதிய பகுதி ஒன்றை, அதாவது, தமிழ் நாடு 1889 ஆம் ஆண்டு நகரத் தொல்லைகள் சட்டத்தின் 3-வது பிரிவில் (13) பகுதியாகக் கொண்டு வரக் கருதப்பட்டுள்ளது. இதே போன்ற விதித் துறையை 1888 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் துறைச் சட்டத்தில் கொண்டு வருவதற்காக அச் சட்டத்தின் 71-வது பிரிவு திருத்தப்பட்டு சென்னை நகரக் காவல் துறை (திருத்த) சட்டம், 1975, வடிவத்தில் தமிழ் நாடு சட்டம் 17/1975 ஆக அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

இப்பிரேரணையை ஏற்று, நிறைவேற்றித் தருமாறு இம்மாமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு, நகரத் தொல்லைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

@ 134 ஆம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[பிற்பகல் 4-50]

* THIRU A. R. DAMODARAN : Sir, while I welcome this amendment to provide lights at public meetings, because nowadays in public meetings heat is generated and very little light is generated and it is good that the Police should think of having petromax lights, may I point out one serious difficulty? The difficulty is that while 10 or 15 years ago, we had a lot of petromax lights, recently most of these petromax lights have been withdrawn. Moreover, petromax lights are also used on kerosene and the Government of India is very anxious that kerosene should not be used except for domestic lighting purposes. As the Hon. the Minister for Law stated, this amendment was suggested several years ago. Now, in addition to petromas lights, certain modern lighting devices have also been developed. We have the automatic battery-developed lights and if the electric current goes off—and that is fairly often in our State. We can have these battery-operated lights. My suggestion is that these battery-operated lights can also be used at public meetings. Then, Sir, we should not forget the old-age practice in Tamil Nadu of the "Dheevatti-holders". We can also use "Dheevattis" for public meetings and it is one way of encouraging a cottage-industry. They can hold "dheevattis" and have the public meeting. It is not necessary that we should depend only on petromax lights.

While on this subject of the Tamil Nadu Towns Nuisances Act, I may be permitted to remind the Hon. Minister of the request that I made even when he moved an amendment six months ago stating that very strict rules should be framed to curb the loudspeaker menace in Madras City and other towns. I am sorry to say that the Act has remained only on paper and we still suffer a great deal from the nuisance, especially in urban areas and cities. As I have pointed out previously, I hope the Government will issue very strict orders because during every festival, for ten days or twelve days, none of us are able to sleep because these people play the gramophone records right from 10 p.m. onwards up to 3 o'clock or 4 o'clock in the early morning. It may be very pleasant for those people who are attending the festival. I have no objection at all to their playing these records; but I would certainly wish that

they can play them within the confines of their own premises and the amplifiers be adjusted to such volumes that the sound is not heard outside. I hope that very strict instructions would be given to the Police in this regard.

Sir, there is another thing on which I would like to comment, taking this opportunity, though it may not be very strictly relevant to the context of the Towns Nuisances Act. Quite recently, in Madras City, I hear that 50 children had been taken to jail because they were flying kites. I do not know why there is this antipathy towards flying kites. All of us, when we were young, used to fly kites and I am sure the Hon. the Minister for Law would also have indulged in this pastime. In fact, kite-flying has now become an art in politics because when we go into politics also, we fly a lot of kites. For young children, I do not think this is such a serious offence as to merit punitive action on the part of the Police officials. We have played with tops, we have played with marbles and we have played with kites when we were young. There is the fact about one tragic accident—I deeply regret the accident where a person lost his life—but may I also point out that fatal accidents may also occur by reason of a child playing marbles in the streets? We all know of our under-privileged children, especially the children who come from the slum areas. Those children do not have play-grounds where they can go and play football, hockey, cricket or tennis. Those children of the slums have to play in the streets and many of them play in the streets. There was a very fatal accident reported in our district, where a child who was playing with marbles on the road, suddenly swerved to the middle of the road and a car which tried to avoid the child hit against a lamp-post and two people died. Such accidents may occur, but because of such accidents, to take such punitive action against kite-flying and to deny the thrill and the pleasure to young children to even enjoy this very simple pastime is, I think, taking a very serious view of what is certainly a very trivial matter. While attempts may be made to prevent kite-flying in Teynampet and on the Mount Road, where traffic may be very busy, I am sure that this innocent pastime of the children can be allowed in certain far-away places where they are not a hindrance to traffic. I would plead on behalf of these children that the Hon. the Minister for Law may kindly see to it that kite-flying is not absolutely prohibited in the bigger

towns and the City of Madras and that they may be allowed to fly kites in certain areas where they are not a hindrance to traffic, because after all one single incident should not mean that this pastime should be entirely prohibited in all towns.

Regardig the other problems dealing with the Towns Nuisances, while I welcome all the amendments that are being made, there are a number of healthy provisions in the Act which cannot be enforced at all in the City of Madras and the primary nuisance of all is the committing of public nuisance on our roads. Wherever you find a concentration of huts, without public toilet facilities, we find this happening. I am sure it is a grave problem even from the point of view of the Hon. the Minister for Health. Grave problems are aroused because of the lack of adequate sanitary facilities for these people who dwell in crowded areas. That is why I wish that the Government should take some more interest especially in the areas where they have put up fine buildings, slum tenements in areas where the facilities are not utilised and our public highways are used indiscriminately. Every day, when I return from the Council, crossing the T. M. Nair Bridge in Egmore, I find that the road has become a regular public latrine and that over 50 people use it in the evenings after 6-30 p.m. I would request that this should be prevented if we have to be proud of Madras City. I believe that in places like Singapore, even the throwing of a scrap of paper is an offence. When such can be the condition even in the Far East, I am sure that in our own country, we should develop a healthy respect for sanitation and good hygiene on the part of our children. Even in my town, in Cuddalore, we have a school called the St. Mary's School and we have got the Cuddalore Maidan which is about 60 to 80 acres. The moment the school bell rings at 12-30 in the afternoon for the lunch interval, we find 300 children using the Maidan as a public latrine. This is probably because they are not taught properly in our schools that hygiene requires such things should not be done in public. I earnestly plead that some sort of corrective measures may be taken. I am not arguing for punitive measures; I am not arguing that 50 people who commit nuisance should be immediately taken to the Court and fined. It is only a slow and educative process that is required and I would request the Government to think on these lines

also and to find out whether some measures could not be devised to prevent the commission of so many other nuisances which are all prohibited in this Act.

Thanking you.

THIRU G. VASANTHA PAI : Mr. Deputy Chairman, I thank you for this opportunity given to me.

I wish to endorse the suggestions made by Thiru A. R. Damodaran regarding the loudspeaker menace. It is only a few days ago that the in-patients of the Cancer Institute Hospital came to me and represented that they were unable to bear the din and noise in Korattur village due to the loudspeaker menace. Despite the complaint they had made to the Inspector-General of Police as well as the Commissioner of Police in this connection, no action was taken. I was sorry to see nearly 100 persons, both persons who were patients and also persons who were waiting on them, with a petition with their thumb-impressions as also their signatures, coming on a sort of deputation to me and requesting that this menace should be stopped. I earnestly request the Hon. the Minister for Law as well as the Hon. the Minister for Health to see that this is stopped. With the further addition of petromax lights which may go on burning throughout the night, the loud-speaker menace will cause further real nuisance to the in-patients of hospitals.

As regards kiteflying and the the restriction proposed to be imposed on that, I have no objection to kiteflying being restricted to a place but I take serious objection to kites being flown in open roads resulting in accidents of the type which recently occurred and which resulted in the death of a person who was going on a motor-bike. I have myself seen the very tough ropes which are now being provided for kites and which are very dangerous in that they even cut the neck as you go across them. Though Thiru A. R. Damodaran may plead for kitefliers, I would request him to desist from carrying the plea to the extreme because I feel that it is a very dangerous pastime that is going on on the roads. This kiteflying may be done on the outskirts of the City or in the beach near the sea and nobody could have any

objection to that. But the Hon. Minister should not make any relaxation in the rule and I think kiteflying in the City at least should be stopped.

Sir, I make a further appeal to the Hon. Minister. Whatever may be the lighting arrangements that may be resorted to—a petromax light or another light or a Phillips lamp—and whatever lights may be provided for the meetings, the very fact that electricity is out going to be used and would be cut off at 11 p.m. would make the meetings prolonged. Especially it may happen so when we have got an election in view in so far as the five—year term of the Assembly is going to end shortly and we may have prospects of an election though there is an Emergency. In view of that, I request that this programme of having prolonged meetings and also permitting loudspeakers to drown the locality with the sound of music as well as the sound of voices should be rigorously prohibited near hospital premises. Thank you.

(பிற்பகல் 5.00)

* **திரு. கே. ராஜாராம்**. துணைத் தலைவரவர்களே, பெட்ரோமாக்ஸ் விளக்கு பற்றி ஒரு திருத்தம். மின்சார விளக்குகளுடன் பெட்ரோமாக்ஸ் லைட்டுகளும் இருக்க வேண்டும் என்று நான் அந்தத் திருத்தத்தில் இருக்கிறது. அது எரிய வேண்டும் என்று இல்லை. ஆக அதில் ஒரு குறை இருக்கிறது என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மின்சார விளக்குகளும் என்றுதான் இருக்கிறது. அதுவும் எரிய வேண்டும் என்று இல்லை.

திரு. கே. ராஜாராம் : மின்சார விளக்குகள் எரியாமல் போய்விட்டால், இந்த பெட்ரோமாக்ஸ் லைட்டுகள் எரிய வேண்டும் என்று குறிப்பாக இல்லை என்றால், ஆபத்து. இந்தத் திருத்தத்திற்கு மற்றொரு திருத்தம் தேவையா என்பதையும் அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, நமது நண்பர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் சிறுர்கள் பட்டம் விடுவதுபற்றிச் சொன்னார்கள். சாதாரணமாக பட்டம் விடுவதில் ஆபத்து ஏற்படுவதில்லை. சென்னை நகரில்தான், பட்டம் விடுவதற்காக என்று தனியாக ஒரு வகை நூல் தயாரிக்கிறார்கள். அந்த நூலை மாஞ்சா நூல் என்று சொல்வார்கள். கண்ணாடியை நுண் தூள்களாக அரைத்து

பசையுடன் கலந்து சாதாரண நூலில் பூசி உபயோகிப்பதுதான் மாஞ்சா என்பது. இப்படிப்பட்ட நூல் எந்த ஊரிலும் இருப்பதாக அல்லது உபயோகிக்கப்படுவதாக எனக்குத் தெரியவில்லை. சென்னை நகரில்தான் இந்த ஆபத்தான விளையாட்டு உளது. ஆகவேதான் இந்தத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. மாஞ்சா என்ற நூலை, கஞ்சி பூசிய கண்ணாடித் தூள் பூசிய கயிறை உபயோகிப்பதைத் தடுத்தாலே போதும். ஆகவே அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒலிபெருக்கிகள் சம்பந்தப்பட்டவர்கள், ஒலிபெருக்கி வைத்திருப்பவர்கள் ஒரு மாத காலமாக அரசாங்கத்திடம் தூது கோஷ்டியாக வந்து கொண்டிருக்கின்றார்கள். என்னையும் வந்து பார்த்தார்கள். அதில் என்னதான் இருத்தம் வந்திருக்கின்றது என்று தெரியவில்லை. இப்போது ஒலி பெருக்கி வைத்திருப்பவர்கள், பொதுக் கூட்டங்களுக்கு ஒலிபெருக்கியை வாடகைக்குக் கொடுப்பதாக இருந்தால், ஒயரிங் கண்ட்ராக்டர் லைசென்ஸ் அத்தாட்சி பெற்ற பிறகுதான், ஒலிபெருக்கிக்கான லைசென்ஸை போலீஸ் இலாகாவினர் கொடுக்கிறார்கள் என்றும், இவர்களுக்குக் கொடுக்கப்படும் வாடகைப் பணத்தையும் அந்த ஒயரிங் கண்ட்ராக்டர்களுக்குக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்றும் சொன்னார்கள். இந்தப் புதிய விதிகளினால், ஒலிபெருக்கி வைத்து பொதுக்கூட்டம் நடத்த முடியவில்லை. மதுரையில் ஸ்ட்ரைக்கே பண்ணுகிறார்கள். அது ஆளும் கட்சிக் கூட்டமானாலும் சரி, எதிர்க் கட்சிக் காரர்கள் பொதுக் கூட்டமானாலும் சரி, யாருக்குமே ஒலிபெருக்கி கிடைப்பதில்லை. அண்மையில் அமைச்சர் அவர்கள் சென்ற ஒரு மீட்டிங் குக்குகூட ஒலிபெருக்கி கொடுக்க மறுத்திருக்கிறார்கள். காரணம் அந்த ஒலி பெருக்கி கொடுக்க புதிய விதிகளின்படி ஒயரிங் காண்ட்ராக்டர் லைசென்ஸ் வாங்க வேண்டும் என்று இருப்பதுதான். இந்த விதி அவர்களை மிகவும் பாதிக்கிறது. அதுபற்றி கவனிக்க வேண்டுமென்று கோரி, அரசாங்கத்திற்குத் தூது கோஷ்டியாக வந்து கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். இதனால் மாற்றுக் கட்சிக்காரர்களுக்கு மட்டுமல்ல, ஆளும் கட்சிக்கும் இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. இந்தக் கஷ்டம் மக்கள் எல்லோருக்கும் இருக்கிறது. அரசாங்கம் இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்ன மாதிரி, எந்த இடங்களில் வேண்டுமானாலும் கூட்டங்கள் போடுவது, கூட்டம் போடுவதற்குத் தகுதியில்லாத இடங்களில் கூட்டம் போடுவது, அங்கெல்லாம் ஒலி பெருக்கிகள் வைத்து பொதுக் கூட்டம் நடத்த லைசென்ஸ் கொடுப்பது—இவைகளையெல்லாம் அரசு கட்டுப்படுத்துவது மிகவும் நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

1975 அக்டோபர் 24] [திரு. கே. இராசாராம்]

மதுரையில் பெருமாள் தெப்பக்குளம் பக்கத்தில் கூட்டம் போடுவதற்கு லைசென்ஸ் கொடுக்கிறார்கள். அந்தப் பகுதி சுற்றிலும் லாட்ஜுகள் இருக்கின்ற இடம். இரவில் 12 மணி வரையில் கூட அந்தப் பகுதியில் கூட்டம் நடத்துகிறார்கள். லாட்ஜுகளில் தங்கியிருப்பவர்கள் வந்து புகார்கள் கூறுகிறார்கள். அந்தப் பெருமாள் தெப்பக்குளம் பகுதியில் மிக்க ஜன நெருக்கடி உள்ளது. அந்த ஜன நெருக்கமான இடத்தில், இந்த மாதிரியான கூட்டம் போடுவதற்கு லைசென்ஸ் கொடுப்பது போன்றவற்றைத் தடை செய்தால், மிகவும் நலமாக இருக்கும். குறிப்பிட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் மட்டும் ஒலி பெருக்கி வைத்து கூட்டம் நடத்த லைசென்ஸ் கொடுக்க வேண்டும். அதைப் பற்றிச் சட்ட அமைச்சர் அவர்கள் சற்று ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெட்ரோமாக்ஸ் லைட்டுகள், பந்தோபஸ்துக்காக வைப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் அது எரியும் நிலைமையில் இருக்க வேண்டும் என்பதற்கேற்ப விதிகள் இருக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்டம் நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதில் பெட்ரோமாக்ஸ் விளக்குகள்பற்றிச் சொன்னார்கள். அவர் சொன்ன அந்தக் கஷ்டம் வராது என்று உறுதி கூறுகிறேன்.

"providing sufficient petromax lights in addition to electric lights" என்றுதான் விதியில் போடப்பட்டிருக்கிறது. 'to provide' என்ற வார்த்தைகளுடன் 'லைட்ஸ்' என்ற வார்த்தை இருப்பதனால், அது சரியாகப் பொருந்தும் என்று கருதுகிறேன். பொதுவாக நகர்ப் பகுதிகளிலும் பிறர்க்குத் தொந்தரவுகள் ஏற்படாமல் அவர்களுடைய உரிமைகளைப் பயன் படுத்திக்கொள்ள வேண்டுமென்ற அளவுக்குத்தான் இந்த விதி முறைகளை நாம் இங்கு கொண்டு வந்திருக்கிறோம். நம் நாட்டைப் பொறுத்த அளவுக்கு, உரிமை இருக்கின்ற அளவுக்கு கடமை இருப்பதாகத் தெரியவில்லை. எல்லோரும் தான் அதற்குக் காரணம் என்பதை மறந்துவிடுகிறார்கள். பொதுக் கூட்டங்களைப் பொறுத்த அளவில், இதுபோன்ற பாதுகாப்புகள் தேவை என்று கருதுகிறோம். எந்தெந்த இடங்கள் என்று முடிவு செய்ய வேண்டும். பிறருக்குத் தொந்தரவு கொடுக்காத இடமாக இருக்க வேண்டும். அரசியல் கட்சிகள் தங்கள் கூட்டத்திற்கு லைசென்ஸ் கொடுக்கவில்லை என்று குறை சொல்லக்கூடாது. கூட்டம் போடும் இடங்களைத் தேர்ந்தெடுத்து, அதில் ஒரு முடிவுக்கு வரவேண்டும். அப்படித் தேர்ந்தெடுத்த இடங்களில் பொதுக்

கூட்டம் நடத்த வலியுறுத்த வேண்டும். அதை மீறுகின்ற நிலைமைகளும் இருக்கின்றன. ஆகவே காவல் துறையினர் அரசியல் கட்சி அன்பர்களை யெல்லாம் அழைத்துப் பேசி, குறிப்பிட்ட இடங்களைத் தேர்ந்தெடுத்து, லைசென்ஸ் கொடுக்க ஏற்பாடு செய்கிறார்கள். பொதுவாக அந்த இடம் போக்கு வரத்தைப் பாதிக்காத அளவுக்கு இருக்குமாறு பார்த்துக்கொள்கிறார்கள்.

ஒலிபெருக்கித் தொல்லை பொதுக் கூட்டத்தில் மட்டும் அல்ல. இங்கே எடுத்துக் காட்டிய மாதிரி, கான்சர் இன்ஸ்ட்டிடியுட்-லே இருப்பவர்களிட மிருந்து புகார் வந்து, புகார் காவல் துறையினருக்கு அனுப்பப்பட்டது. கான்சர் இன்ஸ்ட்டிடியுட் பணியாளர்களும் எங்களிடத்தில் வந்து தெரிவித்தார்கள். மருத்துவ விடுதிகளைச் சுற்றியுள்ள இடங்களில் குறிப்பிட்ட நேரங்கள் தவிர்த்து, பொதுக் கூட்டங்கள் போட்டு ஒலிபெருக்கிகள் வைத்து மக்களுக்குத் தொந்தரவு கொடுத்தால், அதிலே நமது காவல் துறையினர் கண்டிப்பாக இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். நம் நாட்டு நிலைபற்றி நமக்கு நன்றாகத் தெரியும். இந்த ஒலிபெருக்கித் தொல்லையைப் பொறுத்த வரையில், இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 10 மணிக்கு மேல் போடக்கூடாது என்று தடை விதித்திருக்கிறது. இங்கேதான் எதிர்க் கட்சியினர் இதையெல்லாம் பாராட்டிப் பேசுகிறார்களே தவிர, வேறு இடங்களில் பார்க்கும்போது, எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் இதையெல்லாம் மாற்றி வேறுவிதமாகப் பேசிக் கொண்டிருக்கின்ற நிலைமையைத் தான் நாம் பார்க்கிறோம். நம்முடைய அரசியல் கட்சிகளின் தன்மை இப்படித்தான் இருக்கிறது என்பது புலப் படுகிறது. ஆகவே இதுபோன்றவைகளில் நிச்சயமாக கட்டுப்பாடு இருக்க வேண்டும் என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

பட்டம் விடுவதுபற்றிச் சொன்னார்கள். அங்கத்தினர்கள் பதிலும் சொன்னார்கள். அந்த பதில் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். பட்டம் விட்டு விளையாட வாய்ப்பு கொடுப்பதே ஆபத்தில் முடிகிறது. அவர்கள் வசிக்கும் இடத்திற்குப் பக்கத்திலே ரோடுகள்தான் இருக்கின்றன. அந்த நகர ரோடு பகுதிகளிலே இதனால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுகின்றது. மக்கள் அதிகமாக இருக்கின்ற இடங்களில் இதைத் தடுப்பதில் மிகவும் கண்டிப்பாக இருக்கின்றார்கள். அதிலும் குடிசைப் பகுதிகள் உள்ள ரோடு பக்கங்களில் அதிகமாக ஆபத்துகள் வருவதை காவல் துறையினர் பார்த்து, அதிலே மிகவும் கண்டிப்பான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி யிருக்கிறோம். அப்படியிருப்பதுதான் நல்லது என்று கருதுகிறேன். மக்கள் நடமாட்டம் இல்லாத இடத்தில் பட்டம் விட்டால், அதைத் தடுப்பது நமது நோக்கமல்ல.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1975 அக்டோபர் 24] [திரு. செ. மாதவன்]

எலக்ட்ரிகல் லைசென்ஸ் விதிகளில் இதுபற்றி ஒன்றுமே போடாமல் இருந்தது. அதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றுதான் இதை அமுல் நடத்துகிறோம். பெட்ரோமாக்ஸ் லைட்டுகள் இல்லாமல் கூட்டம் போடக்கூடாது என்ற விதிமுறையை காவல் துறை கண்டிப்பாகச் செயல்படுத்தும் என்ற உறுதியையும் நான் தெரிவித்துக்கொண்டு, இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, நகரத் தொல்லைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு, நகரத் தொல்லைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1975) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, நகரத் தொல்லைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1975) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 5.10)